**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 17.12.2024**
**O.S. 28/2022**
**வா.சா. 1 – செல்வின்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் ஆசாரிபள்ளம் அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச்சில் உறுப்பினர் என்றால் சரிதான். எனக்கு பேராயர் தேர்தலில் ஓட்டு போடும் உரிமை அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச்சில் தான் உண்டு என்றால் சரிதான். எனது மனைவி, குழந்தைகள் ஆசாரிபள்ளம் அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச்சில் உறுப்பினர் என்றால் சரிதான். எனது குழந்தைகளுக்கு திருமணம் முதலிய சடங்குகள் செய்ய வேண்டும் என்றால் ஆசாரிபள்ளம் அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச்சில் தான் அனுமதி கடிதம் வாங்க வேண்டும் என்றால் சரிதான். ஆசாரிபள்ளம் அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச் மணவிளை சிஎஸ்ஐ சர்ச்சில் இருந்து 22 கி..மீ தூரம் என்றால் சரிதான். ஆசாரிபள்ளம் அனந்தநாடார் சிஎஸ்ஐ சர்ச் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய இதுவரை கடிதம் கொடுக்க வில்லை என்றால் சரிதான். வேறு ஒரு சர்ச்சில் உறுப்பினராக சேரவேண்டும் என்றால் முன்னால் இருந்த சர்ச் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு தான் சேர வேண்டும் என்றால் சரிதான். சிஎஸ்ஐ நிர்வாகத்திற்கென சட்டவிதிகள் உண்டு என்றால் சரிதான். மணவிளை சிஎஸ்ஐ சர்ச்சில் பிளோட்டிங் உறுப்பினர் என்ன என்றால் நான் சர்ச்சில் காணிக்கை கொடுப்பது போன்ற ஈடுபாடுடைய நபராக இருப்பேன் அதனால் பிளோட்டிங் உறுப்பினர். சிஎஸ்ஐ நிர்வாகத்திற்கென சட்டவிதிகள் படி பிளோட்டிங் உறுப்பினர் என்ற பதவி கிடையாது என்றால் சரிதான். நான் 40 வருடமாக மணவிளை சிஎஸ்ஐ சர்ச்சில் பிளோட்டிங் உறுப்பினர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. காணிக்கையை ஒரு நபர் எந்த சர்ச்சிக்கும் செலுத்தலாம் அதற்கு தடை கிடையாது காணிக்கை செலுத்துவதால் சர்ச்சில் உரிமை கோர முடியாது என்றால் நான் உரிமை கேட்கவில்லை. எனக்கு நீதிமன்றத்தில்

என்ன பரிகாரம் வேண்டும் என்றால் எனது YMM மிஷினரி காணிக்கையை வாங்க மாட்டேன் என்று மறுத்தார்கள் காணிக்கையை வாங்க வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளேன். YMM மிஷினரி எங்கு செயல்படுகிறது என்றால் வட இந்தியாவில் செயல்படுகிறது தலைமை அலுவலகம் நாகர்கோவில் பெருமாள் நகரில் உள்ளது. YMM மிஷினரி தனியான அமைப்பு என்றால் சரிதான். YMM மிஷினரிக்கும் CSI பேராயத்திற்கும் தொடர்பு கிடையாது என்றால் சரிதான். மணவிளை சிஎஸ்ஐ சர்ச்சிக்கும் YMM மிஷினரிக்கும் தொடர்பு கிடையாது என்றால் நிர்வகிக்கும் அதிகாரம் கிடையாது. இந்த வழக்கிற்கு பிறகு YMM மிஷினரிக்கு காணிக்கை செலுத்தினேனா என்றால் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறேன். எந்த வகையில் YMM மிஷினரிக்கு காணிக்கை செலுத்தினேன் என்றால் மணியார்டர் மூலமாக நேரடியாக. YMM மிஷினரிக்கு காணிக்கை செலுத்துவதை தடைசெய்யவில்லை வாங்கி வருகிறார்கள் என்றால் சரிதான். மிஷனரிகளுக்கு கணிக்கை வழங்க வேண்டும் என்றால் நேரடியாக செலுத்த வேண்டும் வேறு அமைப்புகளுக்கு கொடுத்து மிஷினரிக்கு செலுத்துவது சட்டப்படி சரியானது கிடையாது என்றால் ஐந்து வருடமாக சர்ச் மூலமாக தான் கொடுத்து வருகிறேன் சட்டப்படி தவறு என எனக்கு தெரியாது. நான் கேட்டுள்ள பரிகாரமானது எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ராஜதுரை என்பவர் செயலாளராக இருந்த போது மணவிளை சர்ச் மூலமாக YMM மிஷினரிக்கு காணிக்கை செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி ராஜதுரை எனது அம்மாவின் தம்பி என்றால் சரிதான். நான் ராஜதுரை மூலமாக கொடுத்த காணிக்கைக்கும் மணவிளை சர்ச் பொறுப்பு கிடையாது என்றால் சரியல்ல. மணவிளை சர்ச் இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் கமிட்டி தான் சர்ச் அதனால் சர்ச்–ஐ சேர்க்கவில்லை. நான் செயலாளரை மட்டும் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் அவர் மட்டும் தான் காணிக்கை வாங்க மாட்டேன் என்று சொன்னார். வேறு யார் காணிக்கை வாங்க மறுத்தனர் என்றால் பாஸ்டருக்கு கொடுத்தேன் செயலாளருக்கும் கொடுத்தேன் அவரும் வாங்க

வில்லை. காணிக்கை வாங்குமாறு பாஸ்டருக்கு கொடுத்தேன் செயலாளருக்கும் கொடுத்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுசீந்திரம் காவல்நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**